[2004 நவம்பர் 18

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஏற்கெனவே கூறியதைப்போன்று அரசுக் கல்லூரிகளிலே பணிபுரிகின்ற பேராசிரியர்களைத் தேர்வு வாரியம் மூலம்தான் தேர்வு செய்யவேண்டும். ஆனால், தற்போது நியமிக்கப்பட்டிருக்கின்ற அந்தக் கௌரவ விரிவுரையாளர்கள் அந்தந்தக் கல்லூரியில் இருக்கின்ற காலி இடங்களைப் பொறுத்து, அந்தக் கல்லூரியில் இருக்கின்ற முதல்வரே பத்திரிகைகள் மூலமாக விளம்பரம் செய்து தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றார்கள். ஆனால், தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, இங்கே பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளாக மாற்றி அமைக்கப்பட்டதால் அந்தப் பேராசிரியர்கள் தாங்கள் அரசு ஊழியர்களாகவே இருக்கவேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்ததன் காரணத்தினால், அந்தப் பேராசிரியர்களுடைய கோரிக்கை அரசின் பரிசீலனையிலே, அம்மாவினுடைய பரிசீலனையில் இருப்பதால், இந்தக் கௌரவப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல மாண்புமிகு அம்மா அவர்களிடம் இதைக் கூறி விரைவில் இதற்கு ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அரசுக் கல்லூரிகளிலே தற்காலிகமாகப் பணியாற்றக்கூடிய —கௌரவ விரிவுரையாளர்களாகத் தேர்வு செய்யப்பட்டு பணியாற்றக்கூடிய—அவர்கள் நிரந்தரமாக்கப்படுவது கட்டாயமானது. அப்படி அவர்கள் நிரந்தரமாக்கப்படக்கூடிய அதேவேளையிலே, இவர்களைத் தவிர இன்னும் அரசுக் கல்லூரிகளிலே காலிப் பணியிடங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே, இவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும். அதேநேரத்திலே, மாணவர்களுடைய கல்வி நலன் கருதி காலியாக இருக்கின்ற பேராசிரியர் பணியிடங்களையெல்லாம் அரசு நிரப்புமா? எப்போது நிரப்ப முன்வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

2004 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற அரசுக் கலைக் கல்லூரிகளில் இருக்கின்ற மொத்தப் பணியிடங்கள் 4,966. இன்றைய தேதியில் காலியாக இருக்கின்ற பணியிடங்கள் 1,559. இந்த ஆண்டு அந்தப் பணியிடங்களில் 1,250 இடங்கள் கௌரவ விரிவுரையாளர்களைக் கொண்டு நிரப்பப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 25, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

25—

ஆவின் பால் விற்பனை நிலையம்

***13333—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் ஆவின் பால் விற்பனை நிலையம் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) பெண்ணாகரம் பேருந்து நிலையத்தில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை நிலையம் அமைக்கத் தேவையான உரிமம் பெறுவதற்காக பெண்ணாகரம் சிறப்புச் சிற்றூராட்சிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன், ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் அறுசுவை உணவு. இது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பருகக்கூடிய ஒரு சத்தான உணவு. பெண்ணாகரம் பகுதியிலே பால் விற்பனை நிலையம் துவக்க முன்வரக்கூடிய அரசு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணி, பால் சுவையானது என்று சொல்லுங்கள். அறுசுவை அல்ல.

திரு. ஜி.கே. மணி: அறுசுவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறுசுவை என்றால் ஆறு சுவை இருக்க வேண்டும்! *(சிரிப்பு).*

திரு. ஜி.கே. மணி: இல்லை, இல்லை. எல்லாச் சத்துக்களையும் உள்ளடக்கிய இந்தப் பால் சத்தான உணவு. ஆகவே, ஆவின் பால் விற்பனை நிலையம் துவங்கக்கூடிய நம்முடைய அரசு - அந்தப் பகுதி விவசாயிகள் முழுக்க முழுக்க நிரம்பி இருக்கின்ற பகுதி; வானம் பார்த்த பூமியைக் கொண்ட விவசாயிகள்; விவசாயிகள், சார்புத் தொழிலாக கறவை மாடுகளை அதிகமாக வளர்த்து வருகிறார்கள். ஆகவே, விவசாயிகளுடைய அந்தப் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு பாலை விற்பனை செய்வதற்கு, மேலும் பதப்படுத்துவதற்கு அங்கே பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிலையம் ஒன்று துவங்க அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் விற்பனை நிலையம் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர், பால் கூட்டுறவுச் சங்கம் கேட்கிறாரா? இல்லை, வேறு என்ன என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டால், அதற்கு உரிய பதிலைத் தருகிறேன்.

முற்பகல் 10-25

திரு. ஜி. கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் தரப்பிலே அமைச்சர் அவர்கள், பால் விற்பனை நிலையம் தொடங்கப்பட உள்ளது என்று சொல்லியிருக்கிறார். இதனைத் தொடங்கக்கூடிய அரசு, பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே வெறும் 4,800 லிட்டர் பால் மட்டுமே உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. தேவையானால் ஒரு பால் குளிர்வு இயந்திரம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.